1982 பிப்ரவரி 15]

ஊராட்சி ஒன்றியங்களே பராமரிக்க வேண்டும் என்று ஆணை யிடுவதோடு கூட அதற்காக ஒன்றிய அளவில் தனியாக அதிகாரிகளை நியமித்து தாமதமில்லாமல் உடனடியாக அந்தக் குழாய்க் கிணறுகளையெல்லாம் பராமரிக்க அரசு ஆவண செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஊராட்சி ஒன்றிய அளவில் தனியாக பராமரிப்பு வேலைகளுக்கு ஆட்களை அமைப்பது பற்றிய விஷயங்களைப் பரிசீலனை செய்தது உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ஆவார்கள். இந்த அமைச்சகம் அல்ல. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது பரிசீலனைக்குரிய விஷயங்கள் தான். பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தக் கருத்துக்களையெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் வைத்து முதல்வர் அவர்கள் எடுத்த முடிவிற்கேற்ப இப்படிப்பட்ட மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. எதிலும் மாற்றங்கள் கூடாது என்று சொல்லக் கூடாது எதிலும் மாறுவது உலகத்தில் இயற்கை. எல்லாவற்றையும் பரிசிலனை செய்து அவ்வப்போது தேவையான மாற்றங்கள் செய்வோம். அதுதான் எவல்யூஷன் என்பது.

குசஸ்தலி ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம்.

*வினா எண் 213— திரு. பூ. மு. நரசிம்மன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிப்பட்டு அருகாமையில் ஓடும் குசஸ்தலி ஆற்றில் நீர்த்தேக்க அணை கட்டும் திட்டம் அரசுக்குண்டா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டில் திட்டம் வகுக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) பள்ளிப் பட்டு அருகாமையில் ஓடும் குசஸ்தலி ஆற்றில் புதிதாக நீர்த் தேக்கம் கட்டும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால் ஏற்கெனவே குசஸ்தலி ஆற்றில் ஆந்திர மாநில எல்லையில் பள்ளிப்பட்டு அணைக்கட்டு கட்டப்பட்டுள்ளது. இவ்வணைக்கட்டு தமிழகத்தில் 538.98 ஏக்கர் நிலப்பரப்புக்கு பாசனம் அளிக்கிறது. இந்த அணைக்கட்டு மற்றும் அதன் நீர் வழங்கு கால்வாய் சீரமைப்புக்காக ஆந்திர அரசின் ஒப்புதல் பெறப்பட்டு தமிழக அரசின் செலவில் இப்பணி களை ஆந்திர அரசு மேற்கொள்ள அவ்வரசு இசைவு அளித்துள் ளது. பணிகள் பற்றிய அமைப்புப் படம் மற்றும் மதிப்பீடுகள் ஆந்திர அரசுக்கு அனுப்ப தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களால் தயாரிக்கப்பட்டு வருகின்றது.